2005 மார்ச் 7]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்படின், அந்தப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பின், நகராட்சிப் பகுதியில் கொடுப்பதைப் போல, கிராமப்புறங்களிலும் லாரிகள் மூலம் தண்ணீரைக் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

88—

சுத்திகரிப்பு நிலையம்

***53425—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் குளத்தில் கோவை மாநகராட்சியின் கழிவு நீர் கலந்து, சுற்றுப்புறச்சூழல் மற்றும் படகு இல்லம் பாதிப்படைவதைத் தடுத்து சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் குளத்தில் கலந்து வரும் கழிவுநீரினைச் சுத்திகரிக்க, சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குப் பதிலாக, கழிவு நீர் குளத்தில் கலக்காதவண்ணம் தடுத்து, வெளிப்புறம் உள்ள கால்வாயில் அது செல்லுமாறு வழிவகை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியினுடைய மொத்த சாக்கடைக் கழிவு நீரும், மருத்துவமனைக் கழிவுகளும், இரசாயனக் கழிவுகளுமாக, மொத்தமாகச் சேர்ந்து சிங்காநல்லூர் குளத்தில் மட்டுமல்ல, சங்கனூர் ஓடை மற்றும் ராஜ வாய்க்காலின் மூலம் நொய்யல் ஆற்றுப் படுகையில் சங்கமிக்கிறது. இதன் காரணமாக, குளம் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, நொய்யல் ஆறு பாதிக்கிறது, ஒட்டுமொத்த சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கிறது. பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய

சுகாதார அடிப்படை நல உரிமை தடுக்கப்படுகிறது. மலேரியா போன்ற தொற்று வியாதி அடிக்கடி வருகிறது. அந்த ஆற்றைக் கடந்து போன காரணத்தால் பல நூற்றுக்கணக்கானோர் கணுக்கால் வரைக்கும் யானைக்கால் வியாதி வந்தவர்களைப் போல, கால் கறுத்துப் போய் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. நீண்ட பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆகையினாலே அந்த இடத்தில் சுத்திகரிப்பு நிலையம் ஏற்பாடு செய்தோம் என்று சொன்னால், அவை பாதுகாக்கப்படும் என்பது மட்டுமல்ல, விவசாயத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட அந்தத் தண்ணீர் பயன்படும். இதனால் இரண்டு, மூன்று purposes solve ஆக வாய்ப்பு இருக்கிறது. கோவை மாநகரத்திலே உள்ள பொதுப் பணித் துறை இந்த சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் நிலத்தைத் தருவதற்குத் தயாராக இருக்கிறது. நிதியை மாநகராட்சியோ அல்லது அரசாங்கமோ ஒதுக்கீடு செய்தால், ஒரு பெரிய தொகை ஒன்றும் செலவாகிவிடாது. இது பல்லாயிரக்கணக்கான மக்களின் ஜீவாதார, சுகாதாரப் பிரச்சினையோடு, நிலம், விவசாயம் சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதால், மாநில அரசு தயவுசெய்து நிதியை ஒதுக்கீடு செய்து, நடப்பாண்டில் ஒரு முழுமையான சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் குளம் மற்றும் நொய்யல் ஆற்றுக்குச் செல்லும் கழிவு நீரைச் சுத்திகரிக்க சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதால் மட்டுமே மாசுத் தடுப்பினை மேற்கொள்ள இயலும். கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூபாய் 4 முதல் 5 கோடி வரை செலவாகும். மேலும், இதற்காக குளத்திற்கு அருகில் சுமார் 2 முதல் 3 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் தேவைப்படுகிறது. தற்சமயம் மாநகராட்சிக்கு இப்பகுதியில் போதிய நிலம் இல்லாததால், அருகிலுள்ள தனியார் நிலங்கள் நில ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். மேற்படி இந்தப் பணிக்கு மாநகராட்சியில் நடப்பு நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் திட்ட ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனினும் இந்தப் பணியின் அவசியம் கருதி, வரும் நிதியாண்டில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த பரிசீலிக்கப்படும்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதே நேரத்தில், அந்த மாநகராட்சி அறிவித்திருக்கக்கூடிய நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை பெரிய விஷயமல்ல. பொதுப் பணித் துறை, குளத்தையொட்டி

2005 மார்ச் 7]

தென்புறப் பகுதியில் நொய்யல் ஆற்றின் வடபுறப் பகுதியிலுள்ள காலி இடம் இரண்டு ஏக்கர் இடத்தைத் தருவதற்குத் தயாராக இருப்பதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே சொன்னது. மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்டாட்சியர், தாசில்தார், பொதுப் பணித் துறை மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய மொத்த அதிகாரிகள், நான் உட்பட சென்று, அந்தப் பகுதியைப் பார்வையிட்டதோடு, இந்தத் தேவையை கடந்த இரண்டு ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம். மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். இடம் நிச்சயமாகக் கிடைக்கும். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் மாநில அரசின் மூலமாக கோவை மாநகராட்சிக்கு உத்தரவிட்டால் உடனடியாக இந்தப் பணி தொடங்கப்பட்டு, நிறைவேறுவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. உங்கள் உத்தரவு மாத்திரமே எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: தலைவர் அவர்களே, இடம் இருப்பதுடன், நிதியும் 4 முதல் 5 கோடி ரூபாய் தேவைப்படுகின்றது என்ற காரணத்தால், அதற்குண்டான வழிவகைகளை ஏற்பாடு செய்து, அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்று கூறுகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 89, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

89—

இலவச பட்டா வழங்குதல்

***18637—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும், மாவட்டத்தில் உள்ள இதர பகுதிகளிலும் புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் மக்களுக்கு இலவச பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS